**OS.76/2022**

**நாள். 13.11.2025**

**பி.வா.சா.1 – தங்கவேல்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

கருங்கம்மாள் என் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். முருகேசன், காளி, வேலம்மாள், பாலசுப்ரமணியன் ஆகீயோர்களும் என் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பற்றிய விவரங்கள் எனக்குதெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து ஆதியில் கருப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கருப்பனும், அவரது மனைவியும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். கருப்பனுக்கு, மங்கைகிழவன் என்ற ஆரிபு, மங்களம், கருப்பையா என்கிற அன்வர் உசேன்(வாதி) மற்றும் ஜெரினா ஹாலித் (1ம் பிரதிவாதி) வாரிசுகள் என்றால் சரிதான். மங்கை கிழவன் என்ற ஆரிபுவின் மனைவிதான் கருங்கம்மாள் என்றால் சரிதான். மங்களம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது கணவர் சேதுவும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மங்களத்திற்கு 5 முதல் 9 பிரதிவாதிகளும் மற்றும் ஒரு மனோகரனும் வாரிசுகள் என்றால் சரிதான். மனோகரன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மனோகரனின் வாரிசுகள்தான் உஷா, அபிராமி, மைதிலி(2 முதல் 4 பிரதிவாதிகள்) என்றால் சரிதான். தாவா 1முதல் 12 அயிட்ட சொத்துக்களை மங்கைகிழவன் என்ற ஆரிபு தனது மனைவி கருங்கம்மாளுக்கு கடந்த 03.11.2005ம் தேதி வெளிப்பட்டினம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3866/2005 மூலம் இனாம் செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்து பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். மங்கைகிழவன் என்ற ஆரியு மற்றும் கருங்கம்மாளுக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். கருங்கம்மாளுடன் உடன் பிறந்தவர்கள் 10 முதல் 14 பிரதிவாதிகள் என்றால் சரிதான். கருங்கம்மாளுக்கு நாங்கள் (10 முதல் 14 பிரதிவாதிகள்) வாரிசுகள் என உரிமை கொண்டாடுகிறோம் என்றால் சரிதான். அதனால் நாங்கள் இராமநாதபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் கேட்டு

மனு கொடுததோம் என்றால் சரிதான். வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார் என்றால் சரிதான். அதனால் 10 முதல் 14 பிரதிவாதிகளாகிய நாங்கள் என் அக்கா கருங்கம்மாளுக்கு வாரிசுகள் நாங்கள் தான் என அறிவிக்ககோரி இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு.70/2017 வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் இவ்வழக்கில் கண்ட வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் வட்டாட்சியர் எங்கள் வழக்கை எதிர்த்து வழக்கு செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு.70/2017 வழக்கில் நாங்கள் பெற்ற தீர்ப்பை இதுவரை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழககில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா மாறுதலுக்கு போனதால் தாக்கல் செய்யவில்லை. அசல் வழக்கு.70/2017 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை பார்த்தால்தான் எதன் அடிப்படையில் நாங்கள் வாரிசுகள் என நீதிமன்றம் விளம்புகை செய்தது தெரியவரும் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கருப்பன் என்பவர் வழியாக அவரது மகன் மங்கைகிழவன் என்ற ஆரிபுக்கு கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். கருங்கம்மாளுக்கு கருப்பன் மாமனார் என்றால் சரிதான். அசல் வழக்கு.70/2017 வழக்கில் கருங்கம்மாளுக்கு நாங்கள் தான் வாரிசு என தீர்ப்பு பெற்றிருந்தாலும் அதன் அடிப்படையில் வட்டாட்சியர் கருஙகம்மாள் பெயரில் இருந்து எங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து கொடுக்க மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல, காலதாமதப்படுத்தினார். அசல் வழக்கு.70/2017 வழக்கில் நீதிமன்றம் நாங்கள் கருங்கம்மாளுக்கு வாரிசுகள் என்றுதான் விளம்புகை செய்தது என்றும், கருங்கம்மாளின் சொத்துக்களுக்கு வாரிசுகள் என்று விளம்புகை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண்.70/2017 ல் கருங்கம்மாளின் சொத்துக்களுக்கு நாங்கள்தான் வாரிசுகள் என விளம்புகை செய்யப்படவில்லை என்பதால் அந்த தீர்ப்பின் அடிப்படையில் தாவா சொத்துக்களுக்கு 10 முதல் 14 பிரதிவாதிகளாகிய நாங்கள்

உரிமைகோர அருகதை கிடையாது என்றால் சரியல்ல. ஏற்கனவே இதே சொத்துக்களுக்கு வாதி இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.128/2016 என ஒரு வழக்கை தாக்கல் செய்திருநதார் என்றால் சரிதான். வாதி அந்த வழக்கை சில சாதாரண தவறுகளுக்காக வாபஸ் பெற்றுக்கொண்டு அந்த வழககில் எழுந்துள்ள வழக்கு மூலத்தின் அடிப்படையில் மீண்டும் ஒரு வழக்கை தாக்கல் செய்ய அனுமதி பெற்றிருந்தார் என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து நாங்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த சீராய்வு மனுவில் ஏற்பட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். தற்சமயம் தாவா சொத்துக்களுக்கு எங்கள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அதனால் இவ்வழக்கின் வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளுக் தாவா சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லை என்று மறுக்கிறோம் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் அக்கா கருங்கம்மாளுக்கு அவரது கணவர் மற்றும் மாமனார் மூலம் கிடைத்த சொத்துக்கள் என்பதால் தாவா சொத்துக்களுக்கு நாங்கள் கருங்கம்மாளின் வாரிசுகள் என்ற அடிப்படையில் உரிமைகோர முடியாது என்றால் சரியல்ல. மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து தாவா சொத்துக்களுக்கு பட்டா எங்கள் பெயரில் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும் வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கு மட்டுமே உரிமையானது என்றால் சரியல்ல. அசல் வழககு எண்.70/2017 வழக்கின் தீர்ப்பின் மூலம் தாவா சொத்துக்களுக்கு நாங்கள் உரிமைகோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் வழக்கின் வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கு உரிமையுள்ளது என்பதால் வாதி பிராதில் கோரியவாறு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் இன்றையதேதிவரை வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

**1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வாதி தரப்பு  குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டதால் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.